சுருக்கம்

கால்நடை பராமரிப்புத் துறை – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் – மாநில புதுமை நிதி 2017–2018ம் ஆண்டின் கீழ் ரூ.125.00 இலட்சத்தில் கோழிப்பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிக்க வெள்ளை கழிச்சல் நோய்க்கான திவா (DIVA Vaccine) தடுப்பு மருந்தின் தரத்தினை மேம்படுத்துதல் – ஒப்பளிப்பு –ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(கா.ப.6) துறை

அரசாணை (நிலை) எண்.157

நாள் 08.08.2017
ஹேவிளம்பி வருடம், ஆடி 23
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கடித எண். 6132–1/எப்1–1/2017, நாள் 17.04.2017.

*****

ஆணை :

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகப் பதிவாளர் அவர்கள் 2017–2018 ஆம் ஆண்டிற்கு மேற்படி அரசு ஒதுக்கீடு செய்த தொகை ரூ.1,25,00,000/– யினை அப்பல்கலைக்கழகத்தால் மாநில புதுமை நிதியின் கீழ் கோழிப்பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிக்க வெள்ளை கழிச்சல் நோய்க்கான திவா (DIVA Vaccine) தடுப்பு மருந்தின் தரத்தினை மேம்படுத்துதல் திட்டத்திற்கு இவ்வாண்டில் செலவிடப்பட உள்ளது என்றும், எனவே, ரூ.1,25,00,000/–(ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் மட்டும்) த்தினை ஒப்பளிப்பு செய்து செலவினை மேற்கொள்ள ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி–1ல் தமிழ்நாடு மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து மாநில புதுமை திட்டத்தின் கீழ் கோழிப்பண்ணையில் உற்பத்தியை அதிகரிக்க வெள்ளை கழிச்சல் நோய்க்கான திவா (DIVA Vaccine) தடுப்பு மருந்தின் (2017–2018) திட்டங்களுக்கு ரூ.1,25,00,000/–(ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்) கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2415 – வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் – 03 – கால்நடை வளர்ப்பு–004– ஆராய்ச்சி – மாநிலச் செலவினங்கள் – JC – மாநில புதுமை நிதியின் கீழ் கோழிப்பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிக்க வெள்ளை கழிச்சல் நோய்க்கான திவா (DIVA Vaccine) தடுப்பு மருந்தின் தரத்தினை மேம்படுத்துதல் – 09 – உதவித் தொகை – குறிப்பிட்ட திட்டங்களுக்கான நிதி உதவி".
(த.தொ.கு: 2415 03 004 JC 0930)

மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 2415 – வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் – 03 – கால்நடை வளர்ப்பு–004– ஆராய்ச்சி – மாநிலச் செலவினங்கள் – JC – மாநில புதுமை நிதியின் கீழ் கோழிப்பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிக்க வெள்ளை கழிச்சல் நோய்க்கான திவா (DIVA Vaccine) தடுப்பு மருந்தின் தரத்தினை மேம்படுத்துதல் – 09 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான நிதி உதவித் தொகை.
> (த.தொ.கு: 2415 03 004 JC 0930)

மேலே, பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் மாநில புதுமை நிதியின் கீழ் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் நேர் செய்யப்படும்.

> 2415 – வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் – 03 – கால்நடை வளர்ப்பு – 902– கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – மாநிலச் செலவினங்கள் – JA கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 30 கணக்குகளிடையே மாற்றம்.
> (த.தொ.கு: 2415 03 902 JA 3008)

மேலே, பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் எதிர் பற்று (contra debit) வைக்கப்படும்.

> J காப்பு நிதிகள் (b) வட்டி பெறா காப்பு நிதிகள் – 8229 00 மேம்பாடு மற்றும் நலநிதிகள் – 200 ஏனைய மேம்பாடு மற்றும் நல நிதிகள்–BE மாநில புதுமை நிதி
> (த.தொ.கு: 8229 00 200 BE 0006) (out go)

4. மேலே, பத்தி 3–ல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையை உரிய பட்டியலிட்டு, சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், சென்னை–35–இல் தாக்கல் செய்து, காசோலையைப் பெற்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலரிடமிருந்து உரிய முத்திரைப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு வழங்க கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

5. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கணக்குகளை தணிக்கை செய்ய இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறைக்கு அதிகாரம் உள்ளதால், பல்கலைக்கழகப் புத்தகம் மற்றும் கணக்குகளை பார்வையிட அத்துறைக்கு உரிமை உண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதி, கா.ப(ம) மீ.வ துறையின் அ.சா.கு.எண்.26390/கா.ப,பா.வ(ம)மீ/17, நாள்27.06.2017 இசைவுடன் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு முதன்மை செயலாளர்

பெறுநர்

பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை–51
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை – 6
முதன்மை கணக்குத் துறை தலைவர் (தணிக்கை–1), சென்னை –18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை –18/18 (பெயரில்)

முதுநிலை துணை மாநிலக் கணக்காயர், சென்னை – 18
தணிக்கைத் துறை தலைவர் (தணிக்கை–2), சென்னை–18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35 (பெயரில்)
இயக்குநர் (உள்ளாட்சி), நிதித் தணிக்கை, சென்னை –108
இருப்பு கணக்குத் தணிக்கை அலுவலர், சென்னை – 9
நகல்:
நிதித் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளம்) துறை, சென்னை –9
இ.கோ./உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ச. கார்த்திகேயினி ரோகிணி)
அரசு சார்புச் செயலாளர்